**அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்**

**அரண்வாயல் குப்பம், திருவள்ளூர் மாவட்டம் - 602 025.**

**சுற்று மடல் எண்: 018/2023** **நாள்: 31.03.2023**

**'சலனமில்லா மனதினிடம் இந்தப் பிரபஞ்சம் தன்னைக் கையளிக்கின்றது' - லாவோட்சே**

## என் பாசத்திற்குரிய அருட்சகோதரிகளே!

**நெஞ்சம் நிறைந்து உங்களுக்கு உயிர்ப்பு விழா**
**நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

திருஅவையின் மைய நம்பிக்கையாகிய
இயேசுவின் பாடுகள் உயிர்ப்பின் காலத்தில் நாம் இருக்கிறோம்.
இக்காலம் இறையருளை அறுவடை செய்யும் காலம்.
நம் வயலில் விளைந்த தானியங்களை அறுவடை செய்து
ஆண்டு முழுமைக்கும் சேமித்து வைப்பது போல
நாமும் இந்த இறையருளின் காலத்தில் அறுவடைசெய்யும்
இறையாற்றலை சேமித்துக் கொள்ள இந்த நாட்களை
இறையனுபவத்திற்காய்ப் பயன்படுத்துவோம்.

இறைவன் நம்மை சிறப்பாக அழைத்திருப்பது மட்டுமல்ல
நம்மைப் புனிதமாக்குவதற்கான வாய்ப்புக்களையும்
அனுபவங்களையும் அபரிமிதமாக வழங்குகிறார்.
நமக்குத்தான் இந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தி
புனிதத்தில் வளர்வதற்கான மனப்பக்குவம் இல்லை.
ஏராளமான வாய்ப்புக்களை நாம் வீணடிக்கிறோம்.
உலகியல் காரியங்களுக்காக நாம் எடுத்துக்கொள்ளும் சிரத்தை
நம்மை புனிதப்படுத்துவதற்கு நாம் எடுத்துக்கொள்வதில்லை.
சொல்லப்போனால் ஒரு 10 சதவீதம் கூட நாம் முயற்சி செய்வதில்லை.
இந்த உள்ளுணர்வு நமக்கு ஏற்படுமானால்
இந்த அருளின் காலத்தைப் பயன்படுத்தி நம்மால் உயிர்த்தெழ இயலும்.

**'உயிர்த்தெழுதல்'** என்ற மறை உண்மையை
நாம் ஆழமாக உணர்ந்துபார்த்தால் நாம் உயிர்த்தெழ

என்ன செய்ய வேண்டும் என்பது நமக்குத் தெளிவாக விளங்கும்.
தந்தை கடவுள் தன் மகன்மீது கொண்ட
அன்பினால் மட்டும் இயேசுவை உயிர்த்தெழச் செய்யவில்லை.
அல்லது இயேசு கடவுள் தன்மையில் இருந்ததனால்
உயிர்த்தெழுந்தார் என்றும் சொல்லிவிட முடியாது.
உண்மையில் இயேசு என்ற இறைமனிதன்
இறை அருளோடு ஒத்துழைத்ததனால் நிகழ்ந்ததே உயிர்ப்பு.
நாமும் உயிர்த்தெழ வேண்டுமெனில்
உயிர்த்தெழுதலுக்கான அடிப்படைத் தேவைகள் என்ன என்று
உணர்ந்து செயல்பட வேண்டும்.

முதலில் **இறைத்திருவுளத்திற்குத் தம்மை**
**முற்றிலும் கையளித்த இயேசுவைப் போல்**
**நாமும் இறைத்திருவுளத்திற்கு நம்மைக் கையளிக்க வேண்டும்.**
எல்லா இடங்களிலும் இன்று இறை திருவுளம் நடைபெறுகிறதா?
என்பது பெரிய கேள்விக்குறி.
நம் திருவுளத்தை செயல்படுத்துவதில்
நாம் சாமர்த்தியமானவர்களாயிருக்கிறோம்.
ஏதோ இறைத்திருவுளத்தைத் தேடுகிறவர்கள்போல் பாவனை காட்டுகிறோம்.
இந்த இருவேறு மனநிலையிலிருந்து மனம் மாறுவோம்.
இறைத்திருவுளத்தை மட்டுமே நாடித் தேடுவோம்.

அடுத்ததாக **தன்னையே வெறுமையாக்கிய**
**இயேசுவைப் போல் நம்மை வெறுமையாக்குவது.**
மிக மிகக் கடினமான ஒன்று வெறுமையாக்குதல்
நம் மனத்தின் ஆணவங்கள் வெறுமையாக்கப்படுகிறதா?
நம் மனத்தின் பற்றுக்கள் வெறுமையாக்கப்படுகிறதா?
நம் மனத்தில் சேகரித்துள்ள வன்மம், பகை வெறுமையாக்கப்பட்டுள்ளதா?
நாம் இறுகப் பிடித்துவைத்துள்ள பிறர் பற்றிய
வீண்தீர்மானங்கள், தப்பெண்ணங்கள் வெறுமையாக்கப்பட்டிருக்கிறதா?
நமக்கென நாம் உருவாக்கிவைத்துள்ள மனக் கோட்டைகள்,
ஆசைகள், விருப்பங்கள் முற்றிலும் வெறுமையாக்கப்படுகிறதா?
அப்போது நாம் உயிர்ப்புக்குத் தயாராகிறோம்.

**அடுத்ததாக இயேசுவைப் போல் நாம் செய்யாத தவறுகளுக்கும் தண்டனை அனுபவிப்பது.**

நாம் செய்த தவறுகளுக்கான தண்டனையை முதலாய்
நம்மால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை.
நாம் தவறு செய்யாதவர்கள் என்றே வாதிடுகிறோம்.
அப்படியிருக்க செய்யாத தவறுகளுக்குத்
தண்டனையை அனுபவிக்கத் தயாராயிருக்கிறோமா?

**இயேசுவைப் போல் காட்டிக்கொடுக்கப்பட, மறுதலிக்கப்பட,
நண்பர்களால் கைவிடப்பட, நன்மை பெற்றவர்களால்
உதாசீனப்படுத்தப்பட உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் காயப்படுத்தப்பட
தயாராயிருந்தால் மட்டுமே உயிர்ப்பு சாத்தியமாகும்.**

**என் தந்தை கடவுள் கூட என்னைக் கைவிட்டு விட்டாரோ**

என்ற தாங்கொண்ணா சோகம் அழுத்தியபோதும்
நிலைபெயராமல் இருந்ததே இயேசுவுக்கு உயிர்ப்பைக் கொணர்ந்தது.
அனைத்திற்கும் மேலாய் இத்தனை துன்பங்களின்
மன அழுத்தத்தின் காரணத்தோடு ஒப்புரவாகிறார்.
பல சமயங்களில் நம்மில் இந்த
ஒப்புரவு நிறைவாக நடைபெறுவதில்லை.
மனக்காயங்கள் ஆறுவதில்லை; அவமானங்கள் துடைத்தெறியப்படுவதில்லை.
துன்பங்களுக்குக் காரணமான மனிதர்கள் மன்னிக்கப்படுவதில்லை.
மன்னித்தாலும் மீண்டும் உறவுகள் மலர்வதில்லை.
மலர்வதற்கான சாத்தியக்கூறுகள் வறண்டு போகின்றன.
இப்படிப்பட்ட சூழலில் உயிர்ப்பு நிகழுமா?

இப்படி இயேசுவின் உயிர்ப்பு ஏதோ
இறைத்திட்டத்தில் நிகழ்ந்த நிகழ்வுமட்டுமல்ல.
இயேசு தன் வாழ்வைப் பணயம் வைத்து
தன் வாழ்வுக்கான விலைகொடுத்து
உயிர்ப்பை வாங்கிக் கொண்டார்.
சில மணி நேரம் செபிப்பதால் மட்டுமே
நமக்கு உயிர்பு நிகழும் என்று நினைப்பதும்
சில நாட்கள் ஒருசந்தி இருப்பதால்
உயிர்ப்பு நம்மில் நிகழ்கிறது என்று நம்புவதும்
சில பக்தி முயற்சிகள், சில ஒறுத்தல்களால்

இதனை அடைந்து விடலாம் என எண்ணுவதும்
நம் ஆன்மீக அறியாமையையேக் குறிக்கிறது.

### அன்புக்குரியவர்களே!

உயிர்த்தெழுதல் என்பது முற்றிலும் மாற்றம் காண்பது.
நமது இயல்பான உடல் உருமாறி ஒளியுடல் பெறுவது.
நமது ஒளியுடலுக்கேற்ப நம் இயல்புகளும் முற்றிலும் மாறவேண்டும்.
உயிர்த்த இயேசு திடப்படுத்துகிறார். நம்பிக்கைத் தருகிறார்.
உள்ளங்களை ஒளிர்விக்கிறார்.
மந்தப்புத்தியை தெளிவுபடுத்தி விழிப்படையச் செய்கிறார்.
அவரவரின் மனநிலைக்கும் சூழலுக்கும் ஏற்ப புதிய வடிவம் பெறுகிறார்.
நாம் உயிர்ப்பின் மக்களாயிருந்தால் இவை எல்லாம் நம்மில் நிகழவேண்டும்.

நம்பிக்கை இழந்த சூழலில் நம்பிக்கையை விதைக்க
தேறுதல் தேவைப்படும் நேரத்தில் தேற்றிட
குழப்பமானச் சூழலில் தெளிவைக் கொண்டுவர
சோகமான மனங்களில் மகிழ்ச்சியையும் தெம்பையும் உறுதிப்படுத்த
இயேசுவின் உயிர்ப்பு நம்மை அழைக்கிறது.
உயிர்த்த இயேசுவின் சாட்சிகளாய் உயிர்ப்போடு வாழுவோம்.

**அனைவருக்கும் உயிர்ப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்கள்!**

## சகோதரிகளின் கவனத்திற்கு:

### ஆண்டு தணிக்கை:

நமது ஆண்டுத் தணிக்கைக்கான கால அட்டவணை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தாங்கள் உரிய தயாரிப்புடன் குறிப்பிட்ட நாளில் ஆண்டுத் தணிக்கையை முறையாக முடித்துக்கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன். ஆண்டுத் தணிக்கைக்கான அறிவுரைகள் வழிகாட்டுதல்களை நன்கு படித்து புரிந்துகொண்டு ஆவன செய்யுங்கள்.

### வருத்தத்தோடு பகிர்ந்துகொள்கிறேன்:

- ☯ சமீபகாலமாக நம் குழுமங்களில் சகோதரிகளின் பராமரிப்பு பற்றிய கவனமின்மைச் செய்திகளை அறிந்து வருத்தப்படுகிறேன். குழுமத்தில் வாழும் சகோதரிகளின் உடல் நலனில் அக்கறை கொள்வது குழுமத்திலுள்ள ஒவ்வொருவரின் கடமை என்பதை உணர வேண்டும். நோய்வாய்ப்பட்ட வயது முதிர்ந்த சகோதரிகள் மட்டில் நமது கரிசனையை அதிகப்படுத்த வேண்டும்.

☯ மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் சகோதரிகளை உடனிருந்து கவனிக்க நேரம் செலவிட நமக்கு மனமில்லை. **நினைவில் கொள்ளுங்கள் நமக்கும் ஒருநாள் இந்த நிலை வருமென்று.**

☯ உலகமே இன்று உடல் நலத்தில் அக்கறை காட்டவேண்டும் என எல்லா இடங்களிலும் பிரகடனம் செய்கிறது. ஆயினும் நாம் மருத்துவமனைக்குச் செல்வதைத் தவிர உடல் நலத்திற்கு வேறு எதுவும் செய்வதில்லை.

☯ உடல் உழைப்பு சிறிதளவாவது இருந்தால் தான் உடல் ஆரோக்கியமாக இருக்க இயலும். இதனை உணர்வதுமில்லை. செயல்படுத்துவதுமில்லை.

☯ நமது Budget – ஐ உயர்த்தி அறிவித்தபோது சகோதரிகளுக்கு சத்தான சுவையான உணவு தருவது இல்லத்தலைமைச் சகோதரிகளின் கடமை என்று அறிவித்திருந்தேன். சகோதரிகளுக்குப் பல இடங்களில் நல்ல உணவு வழங்கப்படுவதில்லை. இல்லத்தலைமைச் சகோதரிகள் அதைப்பற்றி கவனிப்பதுமில்லை.

☯ மேலே குறிப்பிட்ட அனைத்தும் மிகுந்த வருத்தம் தருகிறது. **தயவு கூர்ந்து குழுமத்தில் அன்பு, அக்கறை, கரிசனையை அதிகப்படுத்துமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.**

## Holy Land திருப்பயணம் பற்றி :

நீங்கள் அனுப்பிய தரவுகள் அனைத்தும் Visa- வுக்காக அனுப்பப்படும். ஒருவேளை ஒரு சிலருடைய Passport Reject பண்ணப்படலாம் என்று Agency கூறினார்கள். Reject பண்ணப்பட்டால் நீங்கள் போக இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். **முதல் குழு மே 11 முதல் 21 வரை** Holy Land **திருப்பயணம் செல்கிறார்கள் என உறுதிப்படுத்துகிறேன்**.

## சபைத் தலைமை அன்னையின் 2023 ஏப்ரல் மாதப் பணித்திட்டம்:

| | | |
|---|---|---|
| 01 - 02 | - | 40 மணிநேர ஆராதனை – மயிலாப்பூர் |
| 03 - 05 | - | மைய ஆலோசனைக் கூட்டம் - சபைத் தலைமையகம் |
| 06 - 08 | - | Holy Week and Easter |
| 09 - 12 | - | மாநிலத் தலைவிகளுடன் இணைந்த மைய ஆலோசனைக் கூட்டம் |
| 13 | - | பெங்களூர் தயாநிவாஸ் |
| 14 | - | மருத்துவப் பணியாளர்கள் கூட்டம் - திண்டுக்கல் |

| | | |
|---|---|---|
| 15 | - | **காலை:** மாரம்பாடி அந்தோணியார் நேர்ச்சை – திண்டுக்கல் <br> **மாலை:** திருவள்ளுவர் சிலைதிறப்பு – அவர் லேடி பள்ளி – திண்டுக்கல் |
| 16 | - | சென்னை பயணம் |
| 17 - 18 | - | Companions இணைந்து இறந்த Companions -க்காக திருப்பலி நிறைவேற்றுதல் - சபைத் தலைமையகம் |
| 19 | - | தனிசெபநாள் - சபைத் தலைமையகம் |
| 20 - 25 | - | அலுவலகப் பணிகள், மாற்றப்பட்டியல் தயாரிப்புப் பணிகள் - தலைமையகம் |
| 26 | - | திண்டிவனம் - Lumen Institute |
| 27 - 30 | - | அலுவலகப் பணிகள் - சபைத் தலைமையகம் |

**இயேசுவின் உயிர்ப்பு நம்மிலும் நிகழ**

**உயிர்ப்பு விழா அனுபவங்கள்**

**நமக்குத் துணைபுரிவதாக!**

**அன்பு கலந்த உயிர்ப்பு விழா நல்வாழ்த்துக்கள்!**

**என் அன்பும் செபமும் என்றும் உங்களோடு இருக்கும்.**




பிரபஞ்சப் பேரன்பில்,

Sr. Maria Philomi FBS

சபைத் தலைமை அன்னை